விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 தை 23 ஐ, அவ 25 இதழ் 359
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-2-1986

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
RECEIVED 5-2-1986
PERIODICALS DIVISION
LIBRARY

## மன்னார் மாவட்டம் வெறிச்சோடியது; பஸ் சாரதிக்கு மின்கம்பத் தண்டனை!

[மன்னார்]

மன்னாரில் நேற்று முழு நாளும் கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. மாவட்டம் பூராவும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இதுவிஷயம் இவ்வாறிருக்க' இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட மன்னார் இ.போ ச. டிப்போவைச் சேர்ந்த சாரதியான எட்வின் என்பவர் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமலையில் தேசியக்கொடிகள் அரைநாளுடன் இறக்கம்!

[திருகோணமலை]

திருகோணமலைப் பகுதியிலுள்ள சில கடைகளில் தேசியக் கொடியை ஏற்றுமாறு அதன் உரிமையாளர்களை பொலிசார் நிர்ப்பந்தித்ததாக தெரியவருகிறது. அத்துடன் இங்கு தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டதை சிலர் வீடியோ படம் எடுத்தார்கள். மட்டக்களப்பில் நேற்று

[8-ம் பக்கம் பார்க்க]

## நீலனுடன் ரொமேஷ் தொலைபேசியில் தொடர்புகொண்டு கிளிநொச்சி நிலைமையை கேட்டறிந்தார்

(பி. ராஜரட்ணம்)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி, கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு கிளிநொச்சி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த வாரம் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்தும், அப்பாவித் தமிழ் மக்கள் அங்கு பலியானது பற்றியும் இந்தியா மிகுந்த கவலை கொண்டிருப்பதாகத் தெரிவித்த திரு. ரொமேஷ் பண்டாரி, கிளிநொச்சி நிலைமை சம்பந்தமாகவும். ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தினால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக் குறித்தும் விபரமாகத் தெரிந்து கொண்டார்.

மேற்படி தொலைபேசி சம்பாஷணை, சுமார் பதினைந்து நிமிட நேரம் வரை நீடித்தது.

## ஒட்டுசுட்டானில் நேரடிச் சமர்!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான்-புளியங்குளம் வீதியில் உள்ள பெரிய பாலம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் முல்லைத்தீவு மாங்குளம் பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

● ஹெலிகொப்டர், பீரங்கித்தாக்குதல்

# முல்லைத்தீவில் 5,000 அகதிகள்!

# பல வீடுகள் தீக்கிரை! பலர் பலி!

(முல்லைத்தீவிலிருந்து நமது நிருபர்)

**முல்லைத்தீவில் போராளிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே இடம்பெற்றுவரும் நேரடிச்சமரினைத் தொடர்ந்து முல்லைத்தீவுப்பகுதியில் சுமார் ஐயாயிரம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்! இவர்கள் உண்ண உணவின்றியும் உடுக்க உடுபிடவையின்றியும் தவித்துக்கொண்டிருக்கின்றனர்!**

முல்லைத்தீவு இராணுவமுகாமின் மூன்று மைல் சுற்றுவட்டத்தில் வசித்த மக்களே முகாமிலிருந்து செலுத்தப்படும் பீரங்கிக் குண்டுகளுக்கும், 'ரொக்கட் லோஞ்சர்', விமானத்தாக்குதல்களுக்கும் அஞ்சி தங்கள் வீடு வாசல்கள் சொத்துச் சுகங்களைவிட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

அகதிகளான மக்கள் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, மாத்தாளன். முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்,

முல்லைத்தீவ இராணுவமுகாமிலிருந்தும் கடல்பகுதியிலிருந்தும் பொதுமக்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

(5-ம் பக்கம் பாரக்க)

## முல்லைத்தீவுக் கடலில் ஹெலிகொப்டர் தாக்குதலால் 20 பேர் பலி!

[கொழும்பு]

முல்லைத்தீவுக் கடலில் இரு வள்ளங்களில்சென்றுகொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டுவீசித் தாக்கியதால், ஒரு வள்ளம் கடலில் மூழ்கியதாகவும் அதிலிருந்த 20 பேர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றைய வள்ளத்தில் சென்றவர்களின் நிலைபற்றி எதுவும்தெரிவிக்கப்படவில்லை.

ஹெலிகொப்டர் தாழப் பறந்து பாதுகாப்பளிக்க நேற்று சவசவண்டிகள் சகிதம் முல்லைத்தீவு நகரில் தண்ணீர் எடுப்பதற்கு இராணுவத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் பீதி தணியவில்லை ஏழாயிரம் அகதிகள் தஞ்சம்!

[கொழும்பு]

டயகம, அக்கரப்பத்தன, தலவாக்கொல்லை ஆகிய இடங்களுக்கு கிராமிய கைத்தொழில் அமைச்சரும், இதொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான், பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் பொலிஸ் மா அதிபருடன் ஹெலிகொப்டரில் நேற்றுச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

இதேவேளை கோயில்கள்' பாடசாலைகள், பௌத்த விகா

(5-ம் பக்கம் பாரக்க)

## மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் ஆயுதப்படைத்தாக்குதலுக்கு மூவர் பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முழுநாளும் என்றுமில்லாத வகையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அதேசமயம் மட்டக்களப்பிலிருந்து நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயில் வந்தாறுமூலை ரயில் நிலையத்

[8ம் பக்கம் பார்க்க]

மங்களகரமான

திறப்பு விழா

நியூமல்லிகா ஸ்ரோர்ஸ்
(நாகலிங்கம் பில்டிங்)

6-2-86 வியாழக்கிழமை காலை 6-00 மணிமுதல் 8-24 வரையுள்ள சுபவேளையில்,

மங்களகரமாகத் திறந்துவைக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்;

நியூமல்லிகா ஸ்ரோர்ஸ்
கண்டி ரோட், மாங்குளம்.

DC 417

## பொலிஸ் நிலையத்தை 1,000 பேர் முற்றுகை

[கொழும்பு]

பொகவந்தலாவைப் பொலிஸ் நிலையத்தை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் முற்றுகையிட்டதாகவும், அவர்களைத் துரத்துவதற்கு ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மத்திய மாகாணப் பொலிஸ் நிலையங்களின் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளதுடன். 24 மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் தலவாக்கொல்லைப் பகுதியில் இரு

[5ம் பக்கம் பார்க்க]

● யாழ். நகரில் நேற்று

## இலங்கை தேசியக்கொடி எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை இலங்கைத் தேசியக்கொடியை இளைஞர்கள் தீயிட்டுக் கொழுத்தினர்.

இக்கொடி யாழ். நகரில்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு பலாலி வீதியில் சகல வசதிகளுடன் வீடும் மூன்றரை பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்க: இராசதுரை. 45, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [C 505]

பாடசாலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான இலகு தமிழ். தொகுத்தவர் திரு செ. சோதிப்பெருமாள். விலை ரூபா 1-75. கிடைக்குமிடம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். C-563

கல்வியங்காடு புதுச்செம்மணி வீதியில் எட்டுஅறைகளும், மூன்று விறாந்தையும் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விலை சகாயம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C-569, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-569

பலகை சங்கிலியுடனுன ஊஞ்சல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 276 92), பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். C-571

பல வர்ண Love Birds விற்பனைக்குண்டு. தொடர்பு:- 12, நல்லூர் குறுக்குவீதி யாழ்ப்பாணம். C-543

## விற்பனைக்கு

மாவிட்டபுரத்தில் பளை என்னும் குறிச்சியில் நல்லவீடு கட்டுவதற்கு உகந்த 12 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: செ. நாகராஜா, கண் வைத்தியர் இல்லம், மாவிட்டபுரம். C-555

200 'Love Birds' இரண்டு கூடுகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீடியோ பிரசாத், இல. 232. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 544)

## தேவை

பள்ளிக்கூட வாங்கு மேசைகள் உடனடியாகத் தேவை. யோசப் 'ஜொஸ்லின்' பத்திமா வீதி, பண்டத்தரிப்பு. C 541

G. C. E. (O. L.), (A. L) வர்த்தக பாடங்கள் தமிழில் படிப்பிப்பதற்கு பகுதிநேரஆசியர்கள் உடன் தேவை. இம்பீரியல் இன்ஸ்ரீயூட், டிஸ்பென்சரி லேன், இளவாலை. C 542

கைக்கடிகாரம் மேசைமணிக்கூடுகள் திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் தொடர்பு கொள்ளவும். தேவன் வோர்ச் வேக்ஸ், பஸ்நிலையம் முன்பாக, சுன்னுகம். C-547

## WANTED

Type writers new or old in any condition English-Tamil. Contact: Fudo Enterprises, 39/17, Power House Road. 3rd lane, (Adj. Samy-Co) Jaffna C-558

## தவறிவிட்டது

தம்பு கணேசன் என்பவரது 4616?4251V இலக்கமுடைய அடையாள அட்டை 25-1-86ல் கொடிகாமம் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் நவீன சந்தை, இல. 159, ''டெலிகோணரில்'' தயவுசெய்து ஒப்படைக்கவும். C-559

# பாப்பரசர் இலங்கை வரவேண்டும்!

## த. ஈ. வி. முன்னணி கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழருக்கு அமைதியையும் ஆதரவையும் கொண்டு வருவதற்கு போப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று தமிழீழ விடுதலை முன்னணி கேட்டுள்ளது.

எந்த அரசியல் தலைவர்களுக்கும் சுயநலங்கள் இருக்கக் கூடும் அதனுல் அவர்களுடைய தவருன எண்ணங்கள் அவர்களது சிந்திக்கும்திறனை மறைத்து விடலாமென்றும் ஆகவே இப்படியான குறுகிய அரசியல் நோக்கங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக விளங்கும் போப்பாண்டவர் இலங்கை தமிழர்களுக்கு, விடுதலை, அமைதிபோன்றவற்றை பெற்றுத்தரலா மென்றும் இந்த அமைப்பு சென்னையில் நேற்று முன்தினம் தெரிவித்தது [து]

# ''சகஊழியர் ஒத்துழைப்பின் அவசியம்''

(உடுவில்)

''ஒருவருடையதிறமையான சேவையை பாராட்டுவது என்பது உண்மையில் அவர் வேலைசெய்த ஸ்தாபனத்தின் ஊழியர்களை பாராட்டுவது போலாகும். ஏனெனில் அங்கு கடமையாற்றும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இன்றி ஒருவர் தமது சேவையை நல்ல முறையில் செயல்படுத்த முடியாது.''

கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியின் உபஅதிபராகக் கடமையாற்றி, சம்மாந்துறை தொழில் நுட்பக்கல்லூரிக்கு அதிபராக பதவி உயர்வுபெற்றுச்செல்லும் திரு. வி. பாக்கியநாதன் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார சேவைபாராட்டு விழாவில் நன்றிதெரிவித்து பேசுகையில் இவ்வாறு கூறினர்.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிமாணவ நலன் புரிச்சங்கம் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு நலன்புரிச் சங்க தலைவர் திரு.

[7ம் பக்கம் பார்க்க]

## அறிவித்தல்

அதிர்ஷ்டலாப முடிவுகள்

1ம் பரிசு - 0895
2ம் பரிசு - 1554
3ம் பரிசு - 2379

ஆறுதல் பரிசு
(1) 1583
(2) 1416

பரிசுக்குரியவர்கள் 10-2-86ற்கு முன் கைதடி அம்பிகை மாதர்சங்க தலைவி திருமதி வடிவேலுவிடம் பெற்றுக்கொள்ளவும். C 564

## 10-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகையா
கோவிந்தசாமி
(உமா பிளேற்றர்ஸ் உரிமையாளர்)

அன்னையின் மடியில்: 11-09-1909

ஆண்டவன் அடியில்: 11-02-1976

(திதி- 05-02-1986)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய். பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், அன்பின் பொக்கிஷமாய். காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமைபோல் காத்தருளிய எங்கள் அன்புத்தெய்வமே எங்களையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து வருடம் பத்து பூர்த்தியாகிவிட்ட போதிலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்ருேம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

185/3, கில்னர் ஒழுங்கை. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், C 566

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், குருநகர், 9/12, தண்ணீர்த் தாங்கி ரோட்டு, 4ம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த காலஞ்சென்ற அன்ரனி கெறகறி என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

- மரணமெய்தியவர்.

வழ இல: ரி/3932

அன்ரனி கெறகறி கைம்பெண் சூசனம்மா, 9/12 தண்ணீர்த்தாங்கிரோட்டு, 4ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

- மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
அ மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
C 528

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ— பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தயாளரட்ணம் பூமகள் வீதி, அரியாலை மேற்கு, அரியாலை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின்விடயத்தில்

— மரணமெய்தியவர்.

சங்கரப்பிள்ளை தயாளரட்ணம் கைம்பெண் பவளம், பூமகள்வீதி, அரியாலை மேற்கு அரியாலை

— மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 3891/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 07-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
க. நாகேந்திரன்
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.

க. கேசவன்
மனுதாரின் சட்டத்தரணி.

1986ம் ஆண்டு தைமாதம் 28ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. C 531

# திருமண அழைப்பு

திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம்
121, விவேகானந்தா ஹில், கொழும்பு-13,
அவர்களின் மகன்
திருநிறை செல்வன்

**மதனராஜன்**

திருமதி இராஜயோகம் இரட்ணசபாபதி
181/8, W. A. சில்வா மாவத்தை, கொழும்பு-6.
அவர்களின் மகள்
திருநிறை செல்வி

**யோகவதி**

காலம்: நிகழும் (9-2-86) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கும் 10-00 மணிக்கும் இடையில்,

இடம்: சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டியில் திருமணம் நடைபெறும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்ரேம்.

தகவல்: திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம்.
திருமதி இராஜயோகம் இரட்ணசபாபதி.
C-537

# TECHNICAL COURSES

## ஆரம்பம்: 1-3-1986

(1) CITY AND GUILDS OF LONDON INSTITUTE.
Technician Course - Part II (Power) - 1987
Minimum Qualification to appear for the Examination: G. C. E. (O/L) Maths.

(2) MOTOR RE-WINDING COURSE
மோட்டார் றீவைண்டிங் பயிற்சி

காலம்: 3 மாதம் - ரூபா 450/- முழுப்பயிற்சிக்கும்

(3) INDUSTRIAL AND HOUSE WIRING
(வயறிங் பயிற்சி)

காலம்: 1½ மாதம் - ரூபா 200/- முழுப்பயிற்சிக்கும்

**ஒமேகா**

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாட்டிற்கு எதிரில்)

A 192

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு - மேற்கு நாடுகளின் உளவாளிகள் பரிமாற்றம்?

## அடுத்தவாரம் நடைபெறுமா?

பேர்லின், பெப். 4

கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையேயான பெரும் உளவாளிகளின் பரிமாற்றம் ஒன்று நடைபெறவுள்ளது. இதுபெரும்பாலும் அடுத்த வாரமளவில் மேற்குபெர்லின்-கிழக்குஜெர்மனி எல்லைப்புறத்தில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மன் பத்திரிகை ஒன்று இதுபற்றித் தகவல் தெரிவிக்கையில் மேற்கு நாடுகளில் பிடிபட்டுள்ள கிழக்கு நாடுகளின் உளவாளிகளை, கிழக்கு நாடுகளில் பிடிபட்டுள்ள மேற்கு நாட்டு உளவாளிகளுக்கீடாக விடுவிப்பது குறித்து அமெரிக்கா, சோவியத் யூனியன், கிழக்கு, மேற்கு ஜெர்மனிகள் ஆகிய நாடுகளிடையே சில காலமாக பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வந்துள்ளன என்று தெரிவித்துள்ளன.

இவ்வாறு விடுவிக்கப்படப் படுபவர் என எதிர்பார்க்கப் படுவோரில் சோவியத் நாட்டைச் சேர்ந்த அனடோலி ஷோவரன்ஸ்கியும் ஒருவர்.

சோவியத் நாட்டில் மனித உரிமைகளுக்காக போராடிய இவர், அமெரிக்காவுக்காக உளவுபார்த்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் 78ம் ஆண்டில் 13 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஆயினும் இந்த உளவாளிகள் பரிமாற்றம் குறித்து கிழக்கு, மேற்கு நாட்டு அதிகாரிகள் கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

மேற்கு நாட்டு பத்திரிகையாளர்கள், இந்த பரிமாற்றம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் கிழக்கு - மேற்கு ஜேர்மன் எல்லைப் பகுதியில் தமது கண்ணை வைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஒரு பரிமாற்றம் நடைபெறும் பட்சத்தில் உளவு சரித்திரத்தில் இது ஒரு பெரும் பரிமாற்றமாக இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (செ)

சோவியத்திலிருந்து

# பிரஞ்சு அதிகாரிகள் வெளியேற்றம்

மொஸ்கோ, பெப் 4

சோவியத் யூனியனிலுள்ள பிரெஞ்சுதூதரகத்தின் நான்கு அதிகாரிகளை சோவியத் யூனியன் நாட்டை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளது.

காரணம் எதுவும் தெரிவிக்கப்படாத இந்த உத்தரவு, பிரான்சு தனது நாட்டிலுள்ள சோவியத் தூதரக அதிகாரிகள் நால்வரை வெளியேற்றுமாறு உத்தர விட்டதற்குப் பதில் நடவடிக்கையாகவே அமைந்துள்ளது எனக் கருதப் படுகிறது.

இளைப்பாறியபிரெஞ்சு விமானப்படை அதிகாரி யொருவர் சோவியத்துக்கு உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே பிரான்சிலுள்ள இந்த நான்கு சோவியத் அதிகாரிகளும் பிரான்சை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக மாஸ்கோவிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் இரு இராணுவ அதிகாரிகள், தொடர்பு அதிகாரியொருவர், வர்த்தக அதிகாரி ஒருவர் ஆகியோர் சோவியத்தை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி கருத்து வெளியிட்ட பிரெஞ்சு அதிகாரிகள், 'இது ஒரு நியாயமற்ற செயல்' என கண்டனம் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதிலடியாக பிரான்சு தனது துறைமுகங்களுக்குள் வரும் சோவியத் கப்பல்களைக் கட்டுப் படுத்தும் என அறிவித்துள்ளது. (செ)

## உலகச் செய்திகள்

சலஞ்சர் விபத்து:

# விசாரணைசெய்யபுதியகமிஷன் நீல் ஆம்ஸ்ரோங் உபதலைவர்

வாஷிங்டன், பெப். 4

அமெரிக்க விண்வெளி ஓடமான சலஞ்சரின் விபத்துப் பற்றி ஆராய விசேட கமிஷனொன்றை ஜனாதிபதி றேகன் நியமித்துள்ளார்.

சென்ற செவ்வாய்க்கிழமை 'சலஞ்சர்' புறப்பட்டு ஒன்றரை நிமிடங்களில் வெடித்து அதில் பயணம் செய்த எழுவரும் மரணமடைந்தது தெரிந்ததே!

இவ்விபத்துத் தொடர்பாக விசாரணை நடத்தும் இக்கமிஷனின் தலைவராக முன்னுள் வெளியுறவு அமைச்சர் திரு. வில்லியம் றொஜர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரனில் காலடிவைத்த முதல் மனிதரான நீல் ஆம்ஸ்ரோங் இதன் உபதலைவராக விளங்குவார்.

ஏற்கனவே அமெரிக்க தேசிய விண்வெளி பயண சபை (NASA) இவ்விபத்துப் பற்றி விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது. (செ)

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில்

# இறுதித்தாக்குதல் நடத்த அரசு தயாராகிறது

## 'ரெலோ' அறிக்கை

[கொழும்பு]

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்கள் மீது இறுதித்தாக்குதலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாயும் இத்தாக்குதலுக்கு அவசியமான ஆயுதப்படைகளை ஏற்கனவே அரசு இப்பகுதிகளுக்கு நகர்த்தியுள்ளதாகவும் தமிழ் ஈழ விடுதலை ஸ்தாபனம் [ரெலோ] விடுத்த அறிக்கையைஆதாரம் காட்டி 'ராய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் 90 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக இலங்கையரசு தெரிவித்துள்ள போதிலும் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் 'போர் அறை கூவலை' எதிர்கொள்ள தமிழ் மக்கள் பூரண தயார் நிலையிலுள்ளனர் என 'ரெலோ' அறிக்கை மேலும் கூறுகிறது.

பிரிட்டிஷ் அமைச்சர் -

# தென் ஆபிரிக்கக் கிளர்ச்சியாளர் சந்திப்பு

லுசாக்கா, பெப். 4

பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி சேர். ஜியோவ்ரே ஹோவ், ஏனைய ஐரோப்பிய பொருளாதார சங்க நாடுகளின் முக்கிய அங்கத்தவர்களுடன் கூட்டாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இனவெறிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் தென்னுபிரிக்க அரசை எதிர்த்துப் போராடும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கியஸ்தர்களுடன் பிரிட்டிஷ் அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பது ஒரு திருப்புமுனையாக அமையும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஸம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தைகளின் போது பிரிட்டிஷ் மந்திரி சேர் ஹோவ், ஆபிரிக்காவில் அமைதியை மீண்டும் ஏற்படுத்தி பேச்சு வார்த்தைகளுக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆ. தே. கா தலைவர்கள், தென்னுபிரிக்க அரசு கறுப்பின மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து பொலிஸ் மற்றும் ஆயுதப் படையினரை வாபஸ்பெற்று அவசரகாலச் சட்டத்தை நீக்கி, கைதுசெய்யப்பட்டுள்ள நெல்சன் மண்டேலா உட்பட பல அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பட்சத்திலேயே போர்நிறுத்தமொன்றை தாங்கள் மேற்கொள்வர் என சேர். ஹோவிடம் தெரிவித்துள்ளனர்.

தென்னுபிரிக்கப் பிரச்னைக்கு வன்முறைகளாலன்றி பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும் எனப் பிரிட்டிஷ் கொள்கையை இச்சந்திப்பு தெளிவாக்கியுள்ளது என அரசியலறிஞர்கள் கூறுகின்றனர். (செ)

## போயிங் விமானங்களுக்கு சோதனை

வாஷிங்டன் பெப் 4

அமெரிக்க தேசிய வான் பிரயாண சபை, அமெரிக்காவிலுள்ள சுமார் 150க்கு மேற்பட்ட போயிங் -747 விமானங்களை கவனமாகப் பரிசோதித்த பின்னரே பிரயாணத்திற்கு அனுமதிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது

சிலவிமானங்களில் பரிசோதனைகளின்போது எரிபொருள் தாங்கியில் வெடிப்புக்கள் காணப்பட்டதைத் தொடர்ந்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வெடிப்புக்கள் கவனிக்கப்படாது விடப்படுமானுல் விமானத்தினுள் அமுக்கம் குறைந்து விமானத்துக்கும் பயணிகளுக்கும் ஆபத்து ஏற்படலாம்.

போயிங் கம்பெனியினரின் இந்த போயிங் -747 ஜெட் விமானங்கள் சுமார் 600 உலகெங்கும் பாவனையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்கள் நிலை: 'ஈரோஸ்' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''நாடற்ற தமிழ் பேசும் மக்களுக்கு குடியுரிமை வழங்கிவிட்டதாக வெளியே காட்டிக் கொண்டு மறுபுறம் ஆட்சியாளர்கள் வன்முறைகளை ஏவிவிட்டிருப்பது ஊர்ஜிதப் படுத்தக் கூடியதாக உள்ளது சில இடங்களில் சுதந்திரக் கட்சிக்குச் சார்பானவர்களும் இணைந்து செயற்படுகிறார்கள்'' என்று ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''பொகவந்தலாவை, டிக்கோயா, ஹட்டன், நோட்டன் பகுதிகளில் குண்டர்கள், குழுக்கள் அரசாங்க ஆதரவுடன் தமிழ்மக்கள் மீது வன்செயல்களை ஏவியபோதே அப் பகுதி மக்கள் திரளாக எழுந்து பொலிஸ் இராணுவபடைகளை முற்றுகையிட நேர்ந்திருந்தது. இந்தக் குண்டர்களில் இருவர் அமைச்சர் ஒருவரின் தொழிற் சங்க முக்கியஸ்தர்களாயிருந்ததை நேரில் அவதானிக்க முடிந்தது. ஆட்சியாளர்கள் ஒருபுறம் நாடற்றிருந்த தமிழ்மக்களுக்கு குடியுரிமைவழங்கிவிட்டதாக வெளியே காட்டிக் கொண்டு, மறுபக்கமாக அமைச்சர் காமினியூடாக வன்முறைகளை ஏவிவிட்டிருப்பது ஊர்ஜிதப்படுத்தக் கூடியதாகவுள்ளது சில இடங்களில் சுதந்திரக்கட்சிக்குச் சார்பானவர்களும் இவர்களுடன் இணைந்து செயற்படுகிறார்கள்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமானது 1981 ல் காலாவதியாகியதை அடுத்து அக் காலங்களிலும் 83 லும 'இந்தியாவிற்கு ஓடு' என்ற கோஷமுடனேயே கலவரங்கள் ஆரம்பிக்கப் பட்டன இம் முறையும் கலகக்காரர்கள் 'பழையங் இந்தியா வட்ட' (இந்தியாவிற்குப்போ) என்ற கோஷமுடனேயே கலவரங்களில் ஈடு படுகின்றனர் மலையக மக்கள் மலையகத்தை விட தென் இந்தியாவே தமக்குப் பாதுகாப்பான பிரதேசமாக எண்ண வேண்டுமென்ற நோக்கத்தையே இந்தக் கலவரம் கொண்டிருப்பதாக உணர முடிகிறது.

சதி நோக்கத்துடன், மலையக தமிழ் பேசும் மக்கள் மீது காடைத்தனம் புரிவது தொடருமாயின் நாம்ஆயுதப்பிரயோகம் செய்யும் நிலைக்குத் தள்ளப்படலாம்.'' (மா)

# இரு வர்த்தகர்கள் கைது

[யாழ்ப்பாணம்]

வவனியா அம்பலாங்கொட ஹோட்டல் உரிமையாளர் கொலை தொடர்பாக இரு வர்த்தகர்கள் வவனியா பொலிசாரினுல் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இவர்களை விசாரணைசெய்த பொலிசார் இவர்களுக்கும் இக் கொலைக்கும் நெருங்கிய தொடர்புஇருப்பதால் மேலும் விசாரணைக்கென இவர்களை கொழும்பு கொண்டுசெல்லவுள்ளனர். [ச]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும், சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும்.

—பிரைன்ட்

# நமது நோக்கு

## இலங்கை அரசின் நோக்கம்

ஆற்றைக் கடக்க, அது வற்றுவதைக் காத்திருந்த மக்களின் நிலையை பாரத வெளியுறவு அமைச்சரின் கருத்து நினைவுறுத்துகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் பகத், 'இலங்கை அரசின் நோக்கத்தை அறிந்தபின்னரே அடுத்த நடவடிக்கை' என்கிறார்.

இராணுவத் தீர்வுக்கு இந்திய அரசாங்கம் அனுமதிக்காதென்றும், இன்று தமிழர் பெருமளவில் கொல்லப்படுவதை கண்டித்த ரொமேஷ் பண்டாரி இங்கு வராது சென்னையுடன் திரும்பிவிட்டார்.

ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த முன்வந்த ஆசிரிய நிபுணர் வகுப்புக்குள் நுழைந்ததும் மாணவர்களுக்கு வழமைபோல வணக்கம் செலுத்தி ''உங்களுக்கு இங்கிலிஷ் தானே நோக்கம் (no come என்றாராம். ஆர்வத்துடன் மாணவர்கள் ''ஆம் சேர் உங்களைத்தான் நம்பி வந்தோம்'' என்றனராம்.

''தம்பிமாரே நாம் இருவரும் இரு மொழிகளைக் கலந்து பேசுவதால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை. சுத்த ஆங்கிலத்தில் பேசினால் நீங்கள் அவதிப்படுவீர்கள்; தனித் தமிழில் பேசுவதானால் ஆங்கிலம் முன்னேறாது நோக்கம் நிறைவேறாது என்றொரு கருத்துரையில் ஆசிரியர் தொடர்ந்தார்.

மீண்டும் கருத்தும் ஹாஸ்யமும் இரண்டறக்கலந்த தமது சொந்தப்பாணியில் விவாதம் நடந்தது. ''நோக்கம் ஆங்கிலத்தின் அடிப்படை அறிவு பெறுவதென்றால் 'no come' என்ற மனத்தளர்ச்சி எவ்வகையிலும் உதவாதென்று சொல்லிச் சிரிக்கவைத்தாராம். வருட இறுதியில் முழுவகுப்பும் சித்தியடைந்தது.

ஒருசிறுகதை, இங்கு நீட்டிச் சொல்லப்படுகிறது; கருத்துப் பெரிதென்பதே அதன் காரணம்.

இலங்கை அரசின் நோக்கம் சமாதானமல்ல என்பதை நாம் யூகித்து அறிய முடிகிறது. ஏபீசி தொடக்கம் இன்றுவரைக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிப்பேசிக் காலம்கழிப்பதெல்லாம் சமாதானம் 'no come' என்ற அடிப்படைக் கொள்கையில்லை யென்பது வெளிவருகிறது. இந்திய அரசுக்கும் சமாதான முயற்சி 'நோக்கமா?'

இலங்கை அரசுடன் ஆயுதப் போரில் ஈடுபட்டிருக்கும் தமிழ்ப் போராளிகள், சமரில் வெற்றிபெறுவதே தமது நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இன்று நடைபெறும் நவீன போரில் ஆயுதப் பாதுகாப்பு அற்ற நிரபராதிகள் அரசு நடத்தத் தொடங்கியிருக்கும் விமானப்போரில் ஆயிரக் கணக்கில் அழிவது சகஜம். போராளிகள் இதை நினைவில் கொள்வது நலம்.

ஒட்டி நின்று சுட்டுவிடுவது கோழைத்தனம். நேருக்கு நேர் வாருங்கள் என்றார் பாதுகாப்புஅமைச்சர் லலித். நேருக்கு நேரே சமர் நடந்திருக்கிறது. போராளிகளைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடிவிட்டாரா பாதுகாப்பு அமைச்சர்.

எவருக்கும் பாதுகாப்பு அளிக்க இயலாத நிலையில் தத்தளிக்கும் அமைச்சர் லலித், பாதுகாப்பு வலயங்கள் மூலம் ராணுவத்தை பாதுகாக்கவும் பொது மக்கள் அழிவதன் மூலம் போராளிகளை முறியடிக்கவும் முயற்சிசெய்கின்றார்.

உணவு கேட்க கல் கிடைத்ததுபோல், ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுக என்று கேட்க, இன்னும் இரண்டு வலயங்கள் யாழ்ப்பாணத்தில் அமைப்பதாகப் பதிலளித்திருக்கிறார் தேசிய பாதுகாப்பு [இன்மை?]க்குப் பொறுப்பான அமைச்சர்.

இத் திட்டத்தில் பூரண வெற்றியை நம்பியிருக்கும் இலங்கை அரசுக்கு சமாதானம் 'no come' என்பது தெளிவாகிறது இதற்கு ஒருபோதும் அஞ்சாத நாம் ஆட்சியின் சவாலை ஏற்க வேண்டும். மேலும் இந்திய அரசு 'போர்நிறுத்தம்' என்ற பொறுப்பை இன்னும் அசட்டை செய்ய நியாயமில்லை போராளிகளுடனும், இலங்கை அரசுடனும் மிக நெருக்கமான தொடர்புகொண்ட பிரதமர் ராஜீவ் குறிப்பிட்டகால எல்லைக்குள் போரைநிறுத்த நிர்ப்பந்திக்க முன்வர வேண்டும்,

ராணுவத்தீர்வை, அரசாங்கமோ போராளிகளோ நோக்கமாகக் கொண்டால் எமது மக்கள் மட்டுமல்ல நாடே அழிவை நாடிநிற்கும். இதனை நாம் நினைவூட்டுவது அவசியம்,

பொதுமக்கள் ஆதரவில் தங்கள் போரைத் தொடரும் போராளிகள் பேச்சுவார்த்தைகளில் அரசியல் அனுபவமுடைய தலைவர்களுடன் இணைந்துபோவது அவசியம். அதேசமயம் தலைவர்கள், இளைஞர் தியாகத்தை துஷ்பிரயோகம் செய்யவோ ஏமாற்றத்துக்கு இடமளிக்கவோ கூடாதென்பது சொல்லாமல் விளங்கும்.

தமிழ்மக்களின் அசையாத ஒற்றுமை இவ்வகையில் பலம்பெறுமென்பதில் தடையில்லை.

இத்தகைய ஒற்றுமையைப் பிரதிபலிப்பது பொதுமக்களின் பெருங்கடமை யாழ்ப்பாணமே இன்று எழுச்சியடைந்திருக்கிறது. முதியோர், பெரியோர், அன்னையர், இளைஞர், யுவதிகள், மாணவ மாணவிகள் அனைவரும் இலங்கை அரசின் போர்த் திட்டத்தை-தமிழரைஅழிக்கும் வஞ்சனையை ஒருமுகமாக எதிர்த்து சமாதான முடிவுக்கு கட்டாயப்படுத்த வேண்டும்

இந்த முயற்சிக்கு போராளிகள் ஆதரவளிப்பது மட்டுமல்ல, தெரிந்தோ தெரியாமலோ முட்டுக் கட்டையாக இருக்கலாகாது.

# "அல்அக்ஸா பள்ளிவாசலில் இஸ்ரேலியர் அட்டூழியத்தை உடன் நிறுத்த வேண்டும்"

## யாழ். முஸ்லிம் கண்டனக் கூட்டத்தில் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

''முஸ்லிம்களின் கலை, கலாசார மத நிலையங்களாகப் பள்ளிவாசல்கள் திகழுகின்றன. பள்ளிவாசல்களோடு தொடர்பின்றி எந்த ஒரு முஸ்லிமும் இருக்கமுடியாது. எனவே தான் மகத்துவமுள்ள 'அல்-அக்ஸா' பள்ளிவாசலை அழிப்பதன் காரணமாக அங்குள்ள முஸ்லிம்களின் கலை, கலாசாரங்களையும் மத உணர்வுகளையும் நிர்மூலமாக்கலாமென்ற திட்டமிட்ட செயல்முறைத் திட்டங்களை இஸ்ரேல் இன்று ஜெரூஸலத்தில் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது இங்கிருந்து கொண்டு இஸ்ரேலுக்கெதிராக ஆயுதம்தூக்கிப்போராட முடியாது. பிரார்த்தனைகள் மூலம், இறைவேண்டுகோள்கள்மூலம் இஸ்ரேலுக்கு இழிவையும் அழிவையும் ஏற்படுத்த முடியும். இஸ்லாமிய வரலாற்றில் இதற்கு ஆதாரங்கள் பல உண்டு.

யாழ். மானிப்பாய் வீதி மொகிதீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்றுமுன்தினமிரவு நடந்த இஸ்ரேலுக்கெதிரான மாபெரும் சண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்ட சகலபேச்சாளர்களும் இக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு, இஸ்லாமிய இளைஞர்கள் அமைப்பு ஆகியவற்றில் பிரதிநிதிகள் கௌரவ பேச்சாளர்களாகக் கலந்து கொண்ட இக் கூட்டத்திற்கு பள்ளிவாசல் கதீப் சதக்கத்துல்லாஹ் மௌலவி அவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டத்தின் முடிவில் 'அல்லாஹு அக்பர்' என்ற தக்பீர் முழக்கத்துடன் பின்வரும் தீர்மானங்கள் நிறைவுசெய்யப்பட்டு சகல அரபு முஸ்லிம் ஸ்தானிகர்களுக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

''அல் அக்ஸர்' பள்ளிவாசல இஸ்ரேல் தனது அட்டூழியங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் அல் அக்ஸா பள்ளிவாசலை உடைத்து அவ்விடத்தில் 'சொலமன்- தேவாலயத்,தை நிறுவும் திட்டத்தை இஸ்ரேல் கைவிடவேண்டும். பலஸ்தீன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இஸ்ரவேலின் அட்டூழிம்களை அரபு முஸ்லிம் நாடுகள் ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு விவாதிக்கக் கொண்டுவரும் சமயத்தில் அமெரிக்கா தனது 'வீட்டோ' என்னும் இரத்து அதிகாரத்தைப் பாவிக்காமலிருக்க வேண்டும். இஸ்ரேலுடன் வைத்திருக்கும் சகல தொடர்புகளையும் முஸ்லிம் நாடுகள் துண்டித்துக் கொள்ளவேண்டும். இலங்கை அரசும் இலங்கை முஸ்லிம்களின் மன உணர்வுகளை இஸ்ரேலிடம் தெளிவாக்கவேண்டும். உலக நாடுகள் இஸ்ரேவலர்களை அவர்களின் அடாவடித் தன்மைகளை பொருளாதார அரசியல் நெருக்கடிகள் மூலம் முடிவுக்குக்கொண்டுவர வேண்டும்.''

## எழுத்தாளர் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இலங்கை முற்போக்குஎழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் வரும் 9ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை9 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளி ஒழுங்கையிலுள்ள ஆசிரியர் சங்க மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறஇருக்கிறது.

'சமகாலமும் இலக்கியமும்' என்ற தலைப்பில் நடைபெறும் இவ்வுரையாடலை திரு. டொமினிக் ஜீவா தொடக்கி வைப்பார்.

# "அரசு செவிசாய்க்காவிடில் மாணவரின் ஒன்றுபட்ட போராட்டம் தொடரும்"

[யாழ்ப்பாணம்]

''மாணவர்களாகிய நாம் பாதுகாப்புவலய சட்டத்தையும், ஏனைய அடக்குமுறைச் சட்டங்களையும் எதிர்த்து அவற்றைநீக்கும்படி அரசினைக் கோருகின்றோம். இதுதொடர்பாக அரசு தகுந்தநடவடிக்கை எடுக்காவிடில் எமது மாணவரின் ஒன்றுபட்ட போராட்டம் தொடரும்''.

தேசியமாணவர் மன்றம் நேற்று ஊர்வலமாகச் சென்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதனிடம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைச்சட்டங்கள் மாணவரை நேரடியாகப் பாதிப்பனவாக அமைந்துவருகின்றன. இதுவரை தனித்தனி மாணவர்களாக இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டும் தடுத்துவைக்கப்பட்டும் பல கொடுமைகளுக்குமாளாகிய மாணவசமுதாயம் இன்று ஒட்டு மொத்தமாக பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. இன்று அமுல்செய்யப்பட்டு இருக்கும் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் பல பாடசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது எந்நேரமும் பாடசாலைகள் தாக்கப்படலாம் என்ற பீதி மாணவரிடையே தோன்றியுள்ளது. பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்கும் அரசின் திட்டம் இப்பாதுகாப்பு வலயச்சட்டத்தினால் தொடக்கி வைக்கப்பட்டு உள்ளது என்பதே எமது கருத்தாகும். இதன்மூலம் இராணுவ முகாம்களை அதிகரித்து பாதுகாப்பு வலயத்தினை விஸ்தரித்து மாணவரின் கல்வியை பாழடிப்பதுடன் நில்லாது எமது மக்களையும் பட்டினிச் சாவுக்கு நிர்ப்பந்திப்பதே அரசின் நோக்கம். (க)

# 'கற்ற கல்வி இந்த மண்ணுக்கேசொந்தமாகட்டும்

## மாணவர்மன்றக் கூட்டத்தில் அதிபர் உரை

[எம்.ரி.சந்திரகுமார்]

''எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் நீங்கள் நிறுவனத்தின் பார்வையாளராக மட்டும் இருக்காது பங்காளியாக மாறி அதன் வளர்ச்சிக்கு உங்களால் இயன்ற பங்களிப்புக்களை செய்யவேண்டும். இதுதான் நீங்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய பங்களிப்பாகஇருக்கும்.

மருதனுமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில்நடைபெற்ற மாணவ மன்ற விசேடகூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அதிபர் திரு சி ஜெயரட்ணம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு விரிவுரையாளர் திரு எம். கந்தசாமி தலைமைவகித்தார். மாணவ மாணவிகளும் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இங்கு கல்விகற்கும் ஒவ்வொரு மாணவரும் தாம் கற்ற கல்வியைதம்முடைய வாழ்க்கையோடு மட்டும் வைத்துக்கொள்ளாது இந்த மண்ணுக்கே சொந்தமாகும் வரையில் சகலருக்கும் அந்தக்கல்வி பயன்படவேண்டுமென்றார். மற்றும்பலர் உரையாற்றினர்.

மாணவ மன்றத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள் சி ஜெயரட்ணம், ரி. விக்கினேஸ்வரன், எம், கந்தசாமி. தலைவர் எஸ். கேதீஸ்வரன், உபதலைவர் எஸ் ஜெயசந்திரிக்கா, செயலாளர் சி.சோமாஸ்கந்தமூர்த்தி. உப செயலாளர் எஸ். ரவீந்திரன், பொருளாளர் எஸ். விஜயலதா, கணக்குப்பரிசோதகர் ஆர். சுகந்தி, பத்திராதிபர் எஸ். எம்.ஏ.பதுவை செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப் பட்டது.

# முல்லைத்தீவிலிருந்து காட்டுவழியாக 10 மைல் நடந்து வந்தார்களாம்

(எம். ரி. சந்திரகுமார்)

முல்லைத்தீவில் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் வீடு தரைமட்டமாக்கப்பட்டு அகதிகளாக வெளியேறி பல மைல் தூரம் காடுகளினூடாக நடந்து களைத்த நிலையில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த எண்மர் நேற்று தந்தை செல்வா அகதி முகாமுக்கு வந்தனர்.

முல்லைத்தீவில் 45 வருடங்களாக சீவியம் நடாத்திவரும் செ. கனகசபை (70 வயது), அவரின் மனைவி போகவதி அம்மாள் (50 வயது), பிள்ளைகளான கோமதி (26 வயது), ஸ்ரீமலர் (18 வயது), செல்வமலர் (16 வயது), ஸ்ரீமதி (21 வயது), சண்முகலிங்கம் (28 வயது), சிவகுமாரன் (25 வயது ஆகியோரே வீடுவாசல்களையும் பொருள் பண்டங்களையும் இழந்து அடையாள அட்டைகளுடனும் கூப்பன் புத்தகங்களுடனும் யாழ். வந்தவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி கனகசபை கூறியதாவது: எனது வீடு முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு சிறிது தூரத்தில் இருக்கிறது. சம்பவதினம் மாலை 3 மணியளவில் முகாமை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாக தீர்க்கப்பட்டன. குண்டுத்தாக்குதல்களும் இடம்பெற்றன. இராணுவத்தினரும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹெலிகொப்டர், பீரங்கித்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பலர் காயமடைந்துள்ளனர். வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன.

அதேசமயம் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னை மரவாடி ஆகிய இடங்களிலிருந்து முல்லைத்தீவுக்கு ஏற்கனவே அகதிகளாக வந்தவர்கள், இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் தாக்குதல்களால், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் பலவித கஷ்டங்களுக்கு மீண்டும் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு கிழமையாக செயலகம், பாடசாலைகள், மற்றும் திணைக்களங்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன. கச்சேரியில் வேலை செய்து கொண்டிருந்த மூவர் இராணுவத்தினரின் பீரங்கி தாக்குதலில் காயமடைந்தது வாசகர்கள் அறிந்ததே. முல்லைத்தீவு இப்பொழுது வெறிச்சோடிக் காணப்படுகிறது.

முல்லைத்தீவில் பொதுமக்களைச் சேர்ந்த இருவரின் சடலங்களையும் குற்றுயிருடன் ஒரு இளைஞரையும் இளைஞர் கோஷ்டி ஒன்று மீட்டுள்ளது. முல்லைத்தீவு நகருக்குள் இராணுவம் செல்ல முயன்றசமயம் அவர்கள் மீது போராளிகள் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இருபகுதியினருக்குமிடையே பலத்த துப்பாக்கிச் சமர் ஏற்பட்டது. அச்சமயத்திலேயே மேற்குறிப்பிட்ட மூன்றுபேர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குஇலக்காகினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இறந்தவர்களின் சடலங்களில் சத்திக் குத்துக் காயங்களும் காணப்பட்டன. இறந்த இருவரும் கொக்கிளாயிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். குற்றுயிராக இருந்தவர் கரைச்சியைச் சேர்ந்தவர். வன்னியசிங்கம் என்பவரின் மகனுவார். இவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மூன்று வீடுகள் தீக்கிரை

முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கத்துக்கு அருகாமையில் உள்ள பல வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன,

## ஒருவர் உயிருடன் எரிப்பு

தண்ணீரூற்று அகதிகள் முகாமிலிருந்த மூவர் கொக்கிளாயிலுள்ள தமது வீடுவாசல்களைப் பார்வையிடச் சென்றபொழுது, அதில்ஒருவர் அகப்பட்டுக் கொண்டதாகவும் அவர் உயிருடன் தீவைத்து எரிக்கப்பட்டதை நேரில் தாம் கண்டதாகவும் தப்பியோடிய மற்றைய இருவரும் தெரிவித்துள்ளனர்.

உயிருடன் எரிக்கப்பட்டவர் திருமணமானவர் என்றும் அவர் பெயர் சின்னத்தம்பி என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் ஹெலிகொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் வயோதிபர் ஒருவர் பலியானுர். பத்துக்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அகதிகளாக்கப்பட்டபின்னர் தங்கள் வீடுகளுக்குச்சென்று உணவுப் பொருள் மற்றும் பொருட்கள் எடுக்கச் சென்றவர்களாவர். அதேநேரம் முல்லைத்தீவு நகருக்குள் பிரவேசித்த இராணுவம் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டது. இதனுல் சில வீடுகள் சேதமடைந்தன.

## சுகாதாரசேவை பாதிப்பு

முல்லைத்தீவு வைத்தியசாலையில் சுகாதார சேவைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குஅண்மையில் சுமார் 200 யார் தூரத்தில் இவ்வைத்தியசாலை இருப்பதனுல் மக்கள் வைத்தியசாலைக்குச் செல்ல அஞ்சுகிருர்கள் இராணுவத்தினா வைத்தியசாலையின் மதில்களைத் தற்பொழுது உடைத்திருக்கின்ருர்கள் ஊழியர்களும் மக்களும் அவ்வைத்தியசாலைக்குச் செல்லத் தயங்குகின்ருர்கள்.

முல்லைத்தீவு போக்குவரத்துச் சபைக்காரியாலயம் இன்று 6-வது நாளாக இயங்கவில்லை. இங்கு கடமையாற்றிய பல ஊழியர்கள் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் கையொப்பமிட்டு வருகின்றனர். இந்த டிப்போவில் இருந்து எந்த சேவையும் நடைபெறவில்லை. [மா]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

றெக்கோடிங் பார்களுக்குத் தேவையான புதிய, பழைய திரைப்பட இசைத்தட்டுக்கள் புத்தம் புதியவை விற்பனைக்குண்டு. த ஸ்ரீரங்கன், 'சத்தியபதி', ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பளை. [C 575]


## முல்லைத்தீவி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இதனையடுத்து ஏற்பட்ட பதட்டத்தால் வீட்டைவிட்டு வெளியேறினேம். எங்களுடன் வேறும் பலர் வெளியேறினுர்கள். சின்னுத்தன் காட்டினூடாக சுமார் 10 மைல் தூரம் வரை நடந்து புதுக்குடியிருப்பை அடைந்து அங்கிருந்து இளைஞர்களின் உதவியினுல் யாழ் நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டோம்.

தபால் நிலைய பென்சன் மூலம் 6பிள்ளைகளுடன்சீவியம் நடாத்திவரும் தாம் சுமார் 8000 ரூபா பெறுமதியுள்ள பால்மாடுகளை வைத்துப் பால் வியாபாரம் செய்து வருவதாக குறிப்பிட்ட அவர் தற்போது பால்மாடுகளையும், கோழிகளையும் தளபாடங்கள், உடுபிடவைகள் உட்ப சகல பொருள் பண்டங்களையும் பறிகொடுத்துவிட்டு அடையாள அட்டைகளை மட்டும் எடுத்துக் கொண்டுவந்ததாகக் கூறினுர்.

தந்தை செல்வா அகதி முகாம் இவர்களுக்கேற்ற சகல ஒழுங்குகளையும் செய்துள்ளது.


### எம்பயர் திரையில்

10-30, 2-30, 6-30,
சந்திரசேகர் - உஷா
பட்டம் பறக்கட்டும்

### லிடோ சினிமா

10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும் வரை


# றீகனின் கொடும்பாவி அங்கும் எரிகிறது!

[மணிலா]

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவிலும் ஜனுதிபதி றீகன், ஜனுதிபதி மார்க்கோஸ் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டுள்ளன.

இத் 'தகனக் கிரியை'களில் 5,000 க்கும் அதிகமான இடதுசாரி கிளர்ச்சிக்காரர்கள் கலந்துகொண்டார்கள்,

# அரியாலையில் மறியல் தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் வைத்து கடந்த முப்பதாம் திகதி இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட ப. செல்லையாவை விடுவிக்குமாறு கோரி நேற்றும் மூன்ரும் நாளாக வழிமறிப்பு போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தமக்கு பன்னிரண்டு பிள்ளைகள் என்றும் அதில் ஏழுபேர் பெண்கள் என்றும் தனது கணவரின் உழைப்பிலேயே தமது குடும்பம் தங்கியுள்ளது என்றும் கடத்திச் சென்றவர்கள் மனிதாபிமான முறையில் தமது கணவரை விடுதலை செய்யுமாறும் திருமதி செல்லையா பூமணி பணிவுடன் வேண்டுதல் விடுக்கின்ருர்,

கணவரை விடுதலை செய்யும்வரை எக்காரணம் கொண்டும் வழிமறிப்பு போராட்டம் கைவிடப்படமாட்டாது எனவும் அவர் தெரிவிக்கிருர். (ஐ)

## மலையகத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரைகளில் தஞ்சமடைந்துள்ள சுமார் ஏழாயிரம் அகதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இப்பகுதியில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு ஐந்து பேர் கொண்ட பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டங்களை ஆராய்வதற்காகப் 'புனர்வாழ்வுக்குழு' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் தோட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இங்கு எப்போது என்ன நடக்குமோ என்ற பயப்பிராந்தியில் வாழும் மக்கள் வெளியே சென்று உணவுப் பொருட்களை வாங்கமுடியாமல் இருப்பதால் லொறிகள்மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக உணவு விநியோகம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டும் பதற்றம் காரணமாக லொறிச் சாரதிகள் இங்குசெல்வதற்குத் தயக்கம் காட்டுகின்ருர்கள்.

### ஒருவர் கொலை

ஹட்டனில் நேற்று தமிழர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டது.

இங்கு ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 3வீடுகள், 3 வாகனங்கள் சேதமாக்கப்பட்டதுடன், கினிகத்தன வீதியில் சில பெட்டிக் கடைகள் எரிக்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க, திரு. தொண்டமானும், திரு. எம். எஸ். செல்லச்சாமியும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இன்று அல்லது நாளை மீண்டும்விஜயம் செய்யவுள்ளனர். [ய-து]

## பொலிஸ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இனத்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து 500க்கும் மேற்பட்டவர்கள் கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஹட்டன், மஸ்கெலியா, நுவரெலியா ஆகியவற்றுக்கான தகவல், போக்குவரத்துத் தொடர்புகள் ஸ்தம்பித்துள்ளதாம்.


### விசேஷ அறிவித்தல்

சிவப்பு நிற றேசிங் சைக்கிள்
மொடல்—றேக். நம்பர்—BL 1633.
சீற் கலர்—பச்சை, வெள்ளை.
களவுபோய்விட்டது. தகவல் அறிவோர்
கீழ்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.

**விக்ரர் அன் சன்ஸ்,**
100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C 573] தொலைபேசி; 23346


# வான் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

தாழையடியைச் சேர்ந்த பி. ஜோசப் என்பவரின் (ஈ. எல். எவ் - 250) வான் நேற்று முன்தினம் ஆரியகுளச் சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்களினுல் கடத்தப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மாலை, மீன்பிடி உபகரணஙளுடன் இவ்வான் ஆரியகுளச்சந்தியடியில்வந்து கொண்டிருக்கையில் 5 இளைஞர்கள் 'கிறனேட்' சகிதம் வானை மறித்து ஏறியுள்ளனர். பின்னர் அராலி சந்திவரையில் சென்று, மூவரையும் இறங்குமாறு பணித்துவிட்டு, ஒருமணித்தியாலத்தில் கஸ்தூரியார் வீதியில் உள்ள குளத்தினருகே மீண்டும் ஒப்படைப்பதாகக் கூறி வானை ஓட்டிச்சென்றனராம்.

ஆனுல் அதன்பின்னர் அந்த வான் ஒப்படைக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

# புதுமையான சுவரொட்டி: காணுமல்போன 'சுதந்திரம்'

[யாழ்ப்பாணம்]

புதுக் கவிதை வடிவில் சுவரொட்டிகளை நீண்ட காலமாக பரவலாக ஒட்டிவரும் 'சிற்பி' அமைப்பினர், நேற்று யாழ் நகர மெங்கும் ஒட்டியிருந்த ''காணவில்லை'' என்றபுதுமையான சுவரெட்டி மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

அச் சுவரொட்டியில் இருந்தவை பின்வருமாறு: ''காணவில்லை' பெயர்: 'சுதந்தரம்' வயது: 38 திகதி: பெப்ரவரி 04-1986 [ஐ]

# இலங்கைத் தமிழர்பற்றி புருனே மன்னருக்கு இலங்கை அமைச்சர் எச்சரிக்கை!

[கொழும்பு]

''புருணேயில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக நிதிஉதவி அளித்து உதவக்கூடும். இந்த மார்க்ஸிஸ அனுதாபவாத சக்திகள் புருணேயின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக அமையக்கூடும்'' என்று இலங்கை பிரதி வெளிநாட்டு அமைச்சர் ரிறேன் பெரேரா புருனேக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அங்கு சென்றபோது, அந்நாட்டு மன்னருக்குத் தெரிவித்துள்ளார்.

புருனேயில் வேலைபார்த்து வரும் பெரும்பான்மைத் தமிழர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணக்கூடியவர்களை இனங்கண்டு கொள்வதற்கு புருனே அரசுக்கு உதவ இலங்கை தயாராக இருப்பதாகக் கூறிய அவர், வெளிநாட்டுத் தமிழர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை தீவிரவாதிகளுக்கு உதவ அனுப்பிவருவது வெளிப்படையான உண்மையாகும் என்றும், இவ்வாறு அனுப்பப்படும் பணம் ஆயுதங்களை கொள்வனவு செய்யவும், பயிற்சிகளைப் பெறுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் மன்னரிடம் கூறினுர். [பி]

## யாழ். நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அரச நிறுவனமொன்றிலிருந்து இளைஞர்களால் கொண்டுவரப்பட்டே தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

அரச நிறுவனமொன்றில் இலங்கை தேசியக் கொடியை ஏற்ற முயற்சித்ததாகவும் திடீரென அங்குவந்த இளைஞர்களினுல் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகிலுள்ள தொலைதொடர்புக் கட்டிடத்தில் தேசியக்கொடி காணப்பட்டது.

யாழ். நகரில் சத்திரச் சந்தியிலுள்ள வள்ளுவர் சிலையிலும் கஸ்தூரியார் வீதி - ஆஸ்பத்திரி வீதி சந்தியில் உள்ள ஔவையார் சிலையிலும் இரு பெரிய கறுப்புக் கொடிகளும், குருநகர் பீச் றோட் சவக்காலை சந்தியிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ். நகரில் நேற்றுக்காலை மக்கள் நடமாட்டம் வழக்கம் போல் காணப்பட்டது. கடைகள், வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

வ. பி. போ. ச. பஸ், மினி பஸ் சேவைகளும் வழக்கம் போல் நடைபெற்றன.

நண்பகலுக்குப் பின்னர், வர்த்தக நிலையங்களும், கடைகளும் பூட்டப்பட்டிருந்ததுடன் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. பஸ்சேவைகளும் பிற்பகல் குறைவாகக் காணப்பட்டது. (ஐ-க)

## மட்டக்களப்பில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் வைத்து திருப்பிவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த ரயில் நிலையத்துக்குச் சென்ற ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ரயில் நிலையத்தில் நின்ற பொதுமக்கள் மூவர் பலியானுர்கள்!

நேற்று முன்தினம் இரவு தொடக்கம் மட்டக்களப்புப் பகுதியில் ஓரே துப்பாக்கி வெடிச்சத்தங்களும் குண்டு வெடிப்புச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன,

நேற்றுக்காலை சகல அரச, கூட்டுத்தாபன, திணைக்களங்களிலும் வெள்ளைக்கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன. நகரவீதிகள் வெறிச்சோடியிருந்தன.

காலை 8 மணியளவில் ரோந்து சுற்றித்திரிந்த ஆயுதப்படையினர் வெள்ளைக்கொடிகளை அகற்றிவிட்டு தேசியக்கொடிகளை ஏற்றினர். முக்கிய சந்திகளில் காவலில் ஈடுபட்டிருந்தனர். (மா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "சிறுவயதிலிருந்தே
# கடவுள் வழிபாட்டில் மனத்தைசெலுத்தவேண்டும்"

(எம். ரி சந்திரகுமார்)

"இளஞ்சிறுார்கள் பக்தியில் சமயப்பற்று வேரூன்ற வேண்டுமானல் அவர்கள் சிறுவயது முதற்கொண்டே கடவுள் வழிபாட்டில் தம்மனதை செலுத்தவேண்டும். சமய அனுட்டான விதிமுறைகளை கடைப்பிடித்து ஒழுகப்பழகிக் கொள்வதோடு விசேட தினங்களிலாவது ஆலயத்திற்குச்சென்று இறைவனை வழிபடுதல் வேண்டும்"

இவ்வாறு தொழும்புத்துறை கிழக்கு சட்டம்பித்தறை விசாகப்பெருமான் முருகன் ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டுப் பிரார்த்தனை வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசிய ஆலய பஜனை கூட்டுப் பிரார்த்தனை பொறுப்பாளரும், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயற்குழு உறுப்பினருமாகிய திரு. எஸ். எஸ். வரதராசா குறிப்பிட்டார்.

ஆலயப் பொறுப்பாளரும் பூசகருமாகிய திரு க. மகேந்திரம் தலைமையில் முருகப் பெருமானுக்கு விசேடபூசை ஆராதனைகள் நடைபெற்றன. பாடசாலை மாணவ மாணவிகள் பொதுமக்கள் உட்பட பெருந்திரளானோர் கூட்டுப் பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொண்டனர்.

திரு. எஸ். எஸ். வரதராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: நாட்டில் இன்று இனப்பூசல்கள் தலைதூக்கி பல்வேறு இன்னல்கள் மத்தியில் மக்கள் தத்தளிக்கும் இக்கட்டான நிலையில் மக்கள் மனச்சாந்தி பெறுவதற்கு கூட்டு வழிபாடே ஒரேயொரு வழி என்று கூறிய அவர் இளஞ்சிறுார்கள் மத்தியில் கூட்டுவழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்திய அவர் இளஞ்சிறுார்கள் பெற்றோரைக் கனம்பண்ணுவதோடு குரு, வயதுமுதிர்ந்தோர் ஆகியோர்களுக்கும் மதிப்பளித்து வாழக் கற்றுக் கொள்ளுதல் அவசியம் என்றும் கூறினார்.

வண்ணார்பண்ணை இளைய தம்பி தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. தா. கணேசதாசன் உரையாற்றுகையில்: இறைவழிபாடே அசசத்தைப் போக்கவல்லது. ஆண்டவன் நாமத்தை உரத்துக்கூறினல் நம்மனதிலுள்ள துன்பங்கள் எல்லாம் நீங்கி வாழ்வில் இன்பம் ததும்புகின்றது. கூட்டுவழிபாட்டில் ஈடுபடும்போது போட்டி, பொறாமை, சுயநலம், வேற்றுமை யாவும் மறந்து பரந்த மனப்பான்மையும் பொதுநல நோக்கும் மறுமலர்ச்சியும் அனைவரது உள்ளத்திலும் வேரூன்றி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்றார்.

இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே திரு வரதராசா தலைமையில் இவ் ஆலயத்தில் பிரதி வெள்ளி தோறும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு நடாத்துப் பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர் திரு. வரதராசாவின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டினர். (ச)

# பதற்றம் தணிந்தது ஆனலும் பீதி....

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் நிலவிய பதற்றம் தணிந்து நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன வேலைத்தள முகாமையாளர் திரு. எஸ் நாகராசா, பாதுகாப்பு அதிகாரி திரு. தர்மகுலசிங்கம், பாதுகாப்பு சார்ஜன்ட் திரு. அமிர்தரஞ்சன் ஆகியோர் விசாரணைக்காக இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டதையடுத்து தொழிலாளர் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது. இவர்கள் பின்பு விடுதலை செய்யப்பட்டதையடுத்து நிலைமை வழமைக்கு திரும்பியது.

தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பியுள்ளதுடன் உற்பத்தி வேலைகளும் நடைபெறுகிறது. தற்சமயம் இராணுவ நடமாட்டமும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனலும் தொழிலாளர் மத்தியில் பீதி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்று பிறந்தநாள்:
# நேர்மைமிகு தலைவன்



மனிதன் இந்த மாநிலத்தில் எவ்வளவு காலம் வாழந்தான் என்பது பெரிதன்று. அவன் எப்படி வாழ்ந்தான், என்ன சாதித்தான் என்பதுதான் அந்த மனிதனை மக்கள் நெஞ்சிலே நிறுத்தி வைக்கின்றது. மனிதத்துவம் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தே, மனிதனுக வாழ்ந்து தன் மாண்பினைப் பல்வேறு துறைகளிலும் பதித்துவைத்த எங்கள் "தர்மர்" "இப்படித்தான் வாழ வேண்டும்," என்ற இலட்சிய வரையறைக்குள் நின்று வாழ்ந்து காட்டியவர்.

பொது வாழ்வில் ஈடுபட்டுத்தான் பொருள் திரட்ட வேண்டுமென்ற நிலையில்லாத அந்தப் பணியாளன் பொது வாழ்வில் ஈடுபட்டதினலேயே தன் பாரம்பரியச் சொத்துக்களைப் படிப்படியாக இழந்தவர். காட்சிக்கெளியன், கடுஞ்சொல் மொழிந்தறியாக் கண்ணியன், முறுவல் தவழும் முகத்துடனே மக்களுக்கு முகங்கொடுத்த மூத்த தலைவன், எம் இனத்தின் விடுதலையை வெறும அரசியல் வாதியாக நின்று நோக்காது உளமார உண்மைத்துவத்துடன் நோக்கிய சிந்தனையாளன் சமதர்மதத்துவம்இன்று வெறும்க கிதப் பூவாக பலர் கையிலும் சிக்கி, கசங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலே இளமை தொட்டே அதனைத் தம் வாழ்வியலாக வரித்துக்கொண்டவர் அந்தப் பெருமகன்.

"தமிழ் ஈழம்" என்ற எண்ணக்கரு தமிழர் கூட்டணியால் முன் வைக்கப்பட்ட போது "எப்படிப் பெறுவீர்கள்?", "எல்லைதெரியுமா?', என்றெல்லாம் எள்ளி நகையாடியோர் எண்ணற்றோராவர். ஆனல் அந்த எண்ணக் கருவுக்கு வடிவங்கொடுக்க விவாதக் களங்களைக் கண்டவர் எங்களின் தருமர். சுன்னுகம் சந்தை மைதானத்தில் வாதத் திறன்மிகு சண்முகதாசனுடன் அவர் நடாத்திய விவாதம் என்றும் அவர் சிந்தனைத்திறனை எம் இதயத்தே பதித்து வைத்திருக்கும்.

தம் உள்ளத்திற் பட்டதை ஒளிவு மறைவின்றி அஞ்சாமையுடன் கூறும் நேர்மையாளர் அவர். ஒரு சந்தர்ப்பத்தில் "தமிழ் மக்களுக்கு இன்று தேவையானது தம் மனதிற் தோன்றும் கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படையாகக் கூறும் அடிப்படை மனித உரிமைதான்" என ஆழ்ந்த கருத்துப் பிரதிபலித்திடக் குறிப்பிட்டார்.

தாம் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்திற்காகவும் அதன் தூய்மையான கோட்பாடுகளுக்காகவும் உளத் தூய்மையுடன் உழைத்த அந்த உத்தமர் தம் முடிவைத் தேடியபோது ரோமை நேசித்த சீசருக்கு நிகராகி நின்றார்

தமிழீழ மக்கள் வடித்த கண்ணீர் அந்த மாசற்ற உண்மையினை நிலை நிறுத்திற்று. அவர் செயற்கரிய செய்தார். சாதாரண மக்களின் தோழனுக உள்ளத்தாற் பொய்யாதொழுகினர். ஆனல் அவர் எம் உள்ளங்களிலெல்லாம் உறைகின்றார்.

— சி. சிவமகாராசா

## முத்திரைத் தட்டுப்பாடு மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள தபாற்கந்தோர்களில் நிலவும் முத்திரை தட்டுப்பாடு மக்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

தபாற்கந்தோர்களுக்கு முத்திரை வாங்கச் செல்வோர் அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும் 'முத்திரை இல்லை' என்ற பெயர்ப்பலகையை பார்த்துவிட்டு பெரும் ஏமாற்றமடைகின்றனர். சாதாரண தபால் அனுப்புவதற்கான முத்திரைகள் கூட அங்கு இல்லையாம்.

இதேவேளை வெளியில் முத்திரைகள் கூடிய விலையில் விற்கப்பட்டு வருகின்றனவாம். இது குறித்து மக்கள் பெருங் கவலை அடைந்துள்ளனர். (ச)

## இலங்கையில் மொறிஷியஸ் தூதுவர்

[கொழும்பு]

தமிழ் மக்கள் கணிசமான அளவு வாழுகின்ற மொறிஷியஸ் தீவின் இலங்கைக்கான தூதுவர் தமது பதவிப் பத்திரங்களை நேற்றுமுன்தினம் ஜனதிபதி ஜயவர்த்தனவிடம் கையளித்தார்.

இவர் வெளிநாட்டமைச்சர் ஏ சி.எஸ். ஹமீதையும்நேற்று சந்தித்து உரையாடினர்.

இதுவரை காலமும் மொறிஷியஸுக்கென இலங்கையிலிருந்து தூதுவர் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 23[1986-2-5]
கிழமை- புதன்
திதி- ஏகாதசி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்- மூலம் பி இ வரை

மேடம்: இதயப் படுதாவில் இன்பத்தின்மின்னல் வாழ்க்கையில்இன்றுசுபகாரியங்களுக்கும் இடமுண்டு. கற்றதன் பயன் கைமேல் கிடைக்கும்.

இடபம்; உறவு முறைகளில் பிளவுகள் தென்படும். மனதில் உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

மிதுனம்; கனிவான சம்பவங்கள் நடைபெறும் காதலர்களுக்கு கனகுஷியான தினம். சிலருக்குத் திடீர் திருமணமும் நடைபெறலாம்.

கடகம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

சிங்கம்; அறவழியில் நாட்டம் பிறக்கும். தாராள சிந்தைமேலிடும். மதிப்புயரும். குடும்பத்தில் சுமுகமான நிலை உருவாகும்.

கன்னி: சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளைப் பெருக்கிக் கொள்வீர்கள் தொழில் சிறப்பும் உண்டு. விருந்தினர் வருகையுமுண்டு.

துலாம்: புதிய பொருட்களைக்கொள்வனவு செய்வதில் இன்று நன்மையுண்டு. மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

விருச்சிகம்: புதிய தலையீடு தலையிடியைத் தரும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும். இன்று பொறுமை நன்று.

தனுசு: கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

மகரம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். இன்று நிதானம் வேண்டும்.

கும்பம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கும். வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். நிதிநெருக்கடியுமுண்டு.

மீனம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. தாய்வழியால் ஆதரவும் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

இரண்டு வயதுச் சிறுமி ஒருத்திக்கு பனை யமனுகியது.

இச்சம்பவம் அரியாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. செல்லத்துரை ஷர்மிளா என்னும் சிறுமியே பனைவிழுந்ததில் பலியானவராவர். (ச)

## புதிய ஆசிரியர்கள் அங்கலாய்ப்பு

[யாழ்ப்பாணம்]

அண்மையில் ஆசிரியர்களாக தெரிவுசெய்யப்பட்டு கிராகம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் சேவைக்கு முந்திய ஆசிரியர் பயிற்சி நெறியை முடித்துக் கொண்டுகடந்தடிச.24ல்வெளியேறிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கும், க.பொ.த உயர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்குமான நியமனக் கடிதங்கள் இதுவரை வழங்கப்படவில்லையாம்.

புதிதாக நியமனம் பெற்ற சகல ஆசிரியர்களுக்கும் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு செய்திகள் வெளியிட்டுள்ள போதிலும் இதுவரை அவர்கள் கைக்குக் கிடைக்காததால் இவ்வாசிரியர்கள் பெரும் அங்கலாய்ப்படைந்துள்ளனர். [ச

## மேலும் 24 அகதிகள் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

திருமலையிலேற்பட்ட வன் செயல்களால் பாதிக்கப் பட்டு அகதிகளாக அப்பகுதியிலேயே தங்கியிருந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் தொடர்ந்தும் திருமலையில் இருப்பதற்கு அச்சம் தெரிவித்து கடந்த வாரம் யாழ் வந்தனர்.

உடுத்த உடைகளுடன் கைக்குழந்தைகளோடு வந்த இவர்கள் தற்போது சங்கிலியன் புனர் வாழ்வுக் கழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர் இம்முகாமிலுள்ள அகதிகளின் எண்ணிக்கை இவர்களுடன் 375 ஆக அதிகரித்துள்ளதாகப் புனர் வாழ்வுக் கழக செயலாளர் செல்வி. நிர்மலா பாலசிங்கம் தெரிவித்துதுளார். (ச)


உடனடித் தேவை

தையல் வேலையில் சிறந்த அனுபவமுடைய பெண்பிள்ளைகள் உடன் தேவை. நேரில்வரவும்.

அன்ரனி காமென்ஸ் (GARMENTS)
"ராஜஸ்தான்" (தபாற்கந்தோர் அருகாமையில்)
கரவெட்டி. C-535



88 AUG.
L/A கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
ஆரம்பம்: 05-02-1986
(புதன் 4-00)
NIRU TUITION CENTRE
STATION ROAD, KONDAVIL.
(கிளை நிறுவனம்: கொக்குவில்)
(A186)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வீடுகளில் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன,

ஈச்சமோட்டை பகுதியில் இனந்தெரியாத சுமார் 10 பேர்கள் வான் ஒன்றில் வந்து துப்பாக்கி முனையில் 3 வீடுகளில் தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

ஒரு வீட்டில் பாதுகாப்பிற்காக புதைக்கப்பட்டிருந்த நகைகளை பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றனராம்.

மற்றொரு வீட்டில் வாய் பேசாத சிறுவன் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் பறித்து சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

சில வீடுகளில் மறுமுறை வரும் போது நகைகள் தர வேண்டும் என எச்சரித்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது

### சகஊழியர்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. சூரியமூர்த்தி தலைமை வகித்தார்

தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபர் திரு எஸ். இராசேந்திரா மற்றும் துணை போதனாசிரியர்களான திரு. அ. இரத்தினம், ஜனாப் மஃறூப் ஆகியோரும், மாணவர்கள். சார்பில், உயர்நிலை மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. எஸ். எட்வேட் ஆகியோரும்பாராட்டுரை வழங்கினர்.

சாவகச்சேரி மாவட்ட

## நீதிமன்றம்

நுணாவில் கிழக்கு சாவகச்சேரி காலம்சென்ற பொன்னையா சுவாமிநாதன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களினதும் உடமைப் பொருட்களினதும் பரிபாலனம் விடயமாக-

— மரணமெய்தியவர்

பொன்னையா சுவாமிநாதன் கைம்பெண் பரமேஸ்வரி நுணாவில்கிழக்கு, சாவகச்சேரி.

— மனுதார்

இல. 239/T

தத்துவம் எதிராக

1. பொன்னையா சுவாமிநாதன் மகன் குகதாசன், நுணாவில் கிழக்கு சாவகச்சேரி.
2. பொன்னையா சுவாமிநாதன் மகள் குமுதினி
3. பொன்னையா சுவாமிநாதன் மகள் கிருபநாயகி (பராயமற்றவர்),
4. பொன்னையா சுவாமிநாதன் மகள் நிமலாம்பிகை (பராயமற்றவர்). எல்லோரும் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (3ம் 4ம் பேர்வழி பராயமற்ற அவர்கள் வழக்குக் காவலன்.)
5. சின்னப்பு நடராஜா, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

— பிரதிவாதிகள்.

### பின்னுறுதிக் சட்டளை அறிவித்தல்

மேற்கூறிய வழக்கில் மேலே சொல்லப்பட்ட மரணச்சொத்துக்கு நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 17ம் திகதி முற்பகல் 9 30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அப் பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு தைமாதம் 23ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
எஸ். கந்தசாமி
மனுதாரின் சட்டத்தரணி.

C 400

## பற்றைக்குள் கிடந்த இளைஞரின் சடலம்

(புலோலி நிருபர்)

கரவெட்டியில் பனங்காணிப் பற்றையொன்றிற்குள் இளைஞரொருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. இவ் இளைஞர் கொலையுண்டாரா? தற்கொலை செய்தாரா? என்பது மர்மமாகவுள்ளது. இவரின் மனைவி தனது கணவரின் மரணத்தில் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இறந்தவர் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த மில் ஒன்றில் கூலிவேலை பார்க்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தன் குலபாலசிங்கம் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பனங்காணிப் பற்றைக்குள் காணப்பட்டு மீட்கப்பட்ட இச்சடலத்தின் மீதான மரண விசாரணையைப் பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளையின் உத்தரவின் பேரில் உடுப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா (ஜே. பி) மேற்கொண்டார். கிராம சேவை அலுவலர் திரு. எஸ். ஏ. ஞானச்சந்திரன் சாட்சிகளை ஆஜர்படுத்தினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# பிரார்த்தனை ஏன்?

## 'மக்கள் பிரசுரம்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நாளாந்தம் அப்பாவி மக்களுக்கு உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுகின்றன, பாதுகாப்பு இல்லாமலிருக்கிறார்கள். பொருளாதாரம் சீர் கெடுகிறது. எனவே தமிழ் மக்களின் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் இதற்காக 24 மணி நேரமும்இல்லங்களில் பிராத்தனை செய்தல் வேண்டும். முதற்கட்டமாக யாழ். குடாநாட்டுமக்கள் இதனைச் செய்தல் வேண்டும். இதனால் யாழ். குடாநாடு ஸ்தம்பிதமடையும்.' இவ்வாறு முதற்கட்ட நடவடிக்கைகள் பற்றி 'எங்கள் சிந்தனைக்கு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தமிழ் பேசும் மக்கள்'' சார்பில் வெளியிட்டுள்ள இப் பிரசுரம் மேலும் தெரிவிப்பதாவது;

''யாழ்.குடாநாடுஸ்தம்பிதம் அடையும் நிலையை அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டவர்கள் தவிர்ந்த சகலரும் செய்யவேண்டும். யாழ்.குடாநாடு ஸ்தம்பிதம் அடைவதை நாமெல்லோரும் செய்வதன்மூலமே மக்கள் சக்தியை அரசாங்கத்துக்கு வெளிக்காட்டி இதன் பயனாக அரசாங்கம் விரைவான அரசியல் தீர்வுகாண நிர்ப்பந்திக்க முடியும். இவ்வாறான 'அரசியல் தீர்வுகாண' என்ற கோரிக்கையில் மக்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கும் வெளிநாடுகளுக்கும், இது ஒவ்வொரு தமிழ் பேசும் பிரஜையினதும் பிரச்னை என்பதனை வலியுறுத்த முடியும். அத்துடன் இவ்வடையாள நடவடிக்கையின் மூலம் முன்வைத்த கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றத்தவறின் தொடர்நடவடிக்கைகளை எடுக்க நாம் தயார் என்பதனைத் தெளிவாக அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

''கோரிக்கையை வலியுறுத்த நடவடிக்கை அவசியமாறது எனவே அரசாங்க கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களை உள்ளடக்கிய சகல தமிழ் மக்களும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம்.

''அரசியல் தீர்வு எப்படிப்பட்ட வடிவத்தில் அமையவேண்டும் என்ற தீர்மானம் தமிழ்க்குழுகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலானது அரசியல் தீர்வுகாணப்படாதவிடத்துத் தொடர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் திரட்டப்படும் மக்கள் சக்தியைத் தமிழ்க்குழுக்கள் தமக்குச் சாதகமாகப் பாவித்து ஓர் அரசியல் தீர்வை விரைவில்காண முயல சந்தர்ப்பம் ஏற்படும்.

''சமாதனமாகவும், சுதந்திரமாகவும் வாழ எமது பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வுகாண ஒன்றுபட்டுச் செயல்படத் தயாராகிவிட்டோம்.'' [ஐ]

## 'துயரங்களைபோக்க பிரார்த்தனையே சிறந்தது'

[யாழ்ப்பாணம்]

''நாம் ஆண்டவரைப் பிரார்த்திப்பதன் மூலம் எமது துயரங்களை அவரிடமே பொறுப்பாக விட்டுவிடுகின்றோம். அதனால் எமது ஆன்ம விகாரம் மன்னிக்கப்படுகின்றது. துயரங்களை வெல்ல பிரார்த்தனையே சிறந்த ஔடதமாகும்'' இவ்வாறு பரந்தன் இரசாயன விளையாட்டுக்கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட கிறிஸ்துவிழா இறுதி நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பரந்தன்ஜெபஆலய பங்குத்தந்தை அருட்திரு சந்தனம்பிள்ளை கூறினார்.

மேலும் அவர் பேசுகையில்: ''மக்களிடமுள்ள வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையை நிலைநாட்டவேயேசு மகன் மார்கழி மாதத்தில் பாலகனைகப் பிறந்தார். அனைவரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவனை இத்தினத்தில் நினைவுகூர்வோமாக'' என்றார்.

கூட்டுத்தாபனத் தொழில் முகாமையாளர் திரு. சி. தங்கராசா தமது உரையின்போது: ''பல துயரங்களுக்கும் பிரச்னைகளுக்கும் மத்தியிலும்கூட இக் கிறிஸ்மஸ்விழாவை மிகஎளிய முறையில் ஏற்பாடு செய்திருந்த இரசாயன விளையாட்டுக்கழக நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய தொழிலாளர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்'' என்றார்.

நலன்புரி உத்தியோகத்தர் திரு. ந. இராமநாதன் நன்றியுரையுடன் விழா [illegible]

## அகதிகள் துயர் துடைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா அகதிமுகாமில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளின் துயர் துடைக்கக் கோரி அன்னையர் முன்னணி பத்திரிகைகள் மூலமாக பொது மக்களிடம் வேண்டு கோள் ஒன்றை விடுத்துள்ளது.

அவ் வேண்டு கோளில் ஒவ்வொரு நாளும் பிடி அரிசி ஒதுக்கி வைங்து அகதி முகாம் அடையாள அட்டையுடன் வரும் தொண்டர்களிடம் கொடுப்பதோடு அகதிகள் நலன்கருதி நிதி, உணவுப்பொருகள், மருந்து வகைகள், தளபாடங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் தந்துதவுமாறு சேட்கப்பட்டுள்ளது தயரிக்கப்பட்ட உணவுகளை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் முகாம் நிர்வாகிகளுடன் முற்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறும் [illegible]

ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின்

## முழுமையான பலன்களை கிராமிய மக்கள் பெற வேண்டும்

[புலோலி]

''கிராமங்கள் தோறும் திறந்துவைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின் முழுமையான பலன்களையும் கிராமிய மக்கள்பெற்றுக்கொள்ளவேண்டும். இதன் மூலமே சுகாதார வலிமை மிக்க கிராமிய சமுதாய அமைப்பை ஏற்படுத்த முடியும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் தேவையான சேவைகளை வழங்கத்தயாராகவுள்ளனர்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுத்தலைமை சுகாதாரப்பரிசோதகர் திரு. இராசேந்திரம் புலோலி ஆரம்ப சுகாதார கவனிப்பு இணைப்புக் குழுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மந்திகை மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றுகையில் திரு. இராசேந்திரம் குறிப்பிட்டதாவது.

''மக்கள் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களில் போதிய அக்கறைகாட்டத் தவறுவது கவலைக்குரியதாகும். சுகாதாரப் பாதுகாப்புகளிலும் கவனம் செலுத்துவதில்லை. இதனால் மக்கள் பல்வேறு வகையான நோய்களால் பீடிக்கப்படுகின்றனர். பிள்ளைகளுக்குக்கட்டாயம் தடுப்பூசிகள் போடப்படவேண்டும். இன்றைய நிலையிலே கிராமிய ஆரம்பசுகாதார கவனிப்பு நிலையங்களின் சேவை மக்களுக்கு இன்றியமையாததாகும்.''

மக்கள் சுகாதாரக்குழு உறுப்பினர் திரு. எஸ். இராஜராஜேஸ்வரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''ஆரம்ப சுகாதார கவனிப்பில் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு அம்சங்களும் அடங்குகின்றன. கிராமிய மக்கள் ஒவ்வொருவரும் முதலுதவிப் பயிற்சிகளைப்பெற்றிருக்கவேண்டும் சூழல் பாதுகாப்பு, மரம்நாட்டும் இயக்கம் போன்றனவற்றிலும் முக்கியமாக ஈடுபடவேண்டும்''

டாக்டர் எஸ். கணேசநாதன் [டி. எம். ஓ], டாக்டர் எஸ் கிருஷ்ணபிள்ளை, டாக்டர் வேலும்மயிலும், திருமதி எம். பாலகிருஷ்ணன். திரு. என். நல்லலிங்கம், திரு ஏ. அருணாசலம், திரு எம். விஜயரத்தினம், திருமதிமாணிக்கவாசகர், செல்வி வி. குமாரசாமி ஆகியோர் இணைப்புக்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இடமாற்றம்

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நிர்வாகத் துறை பிரதம கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு வி. சபாநாயகம் அவர்கள் பெப்ரவரி மாதம் முதலாந் திகதியிலிருந்து வவனியா பிரதேச கல்விப்பணிப்பாளராககல்வியமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார்.

## மீண்டும் தொடரும் பகிரங்கக் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

''மீண்டும் தொடர்கிறது வாகனக் கொள்ளை. பட்டப் பகலில் பகிரங்க வீதியில் ஆயுதக் கும்பலின் கடத்தல் நாடகம் தமிழ் ஈழத் தளபதிகளே தாங்கள் தமிழ் ஈழத்தில் நிற்கும் போதே ஈழ மக்களுக்கு ஏன் இந்த தொல்லை.''

இவ்வாறு யாழ்நகரில் ஒட்டப்பட்டுள்ள ''முஸ்லிம் செய்திப் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.'' முஸ்லிம் செய்திப் பிரிவின் மேற்படி சுவரொட்டியில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

''1-2-86 அன்று எழுதுமட்டுவாளில் வைத்து 'மெக்ஸ்' போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனம் ஆயுத முனையில் அபகரிக்க எடுத்த முயற்சி கை கூடாதபடியால் இயந்திரத் துப்பாக்குப் பிரயோகம் செய்யப்பட்டதுடன் றைவர், கிளீனர் நையப் புடைக்கப்பட்டனர்.

''மேலும் 3 ம் திகதி இதே ஆயுதக்கும்பல் 'சலாம்ஸ்' போக்குவரத்துக்குச் சொந்தமான வாகனத்தை பளையில் வைத்து கொள்ளையடித்துள்ளனர். இதில் யாழ் மக்கள் அறுபதுபேரின்உடைமைகள் இருந்தன யாவும் கொள்ளையடிக்கப்பட்டன.

இத்தகைய கொள்ளையில் ஈடுபடும் பின்னணியினரை நீங்கள் பகிரங்கப் படுத்த வேண்டும்.''

இது சம்பந்தமான தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு யாழ். முஸ்லிம் ஒன்றியம் கூடவிருப்பதாகவும் இச் செய்திப் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பரு. விழிப்புக்குழு அலுவலகம்

(புலோலி)

பருத்தித்துறைவிழிப்புக்குழுவின் அலுவலகம் பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ளகட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் உள்ள 34-ம் இலக்கக் கட்டிடத்திலேயே இவ்விழிப்புக்குழுவின் அலுவலகம் அமைந்துள்ளது. விழிப்புக் குழுவின் பொதுசனத்தொடர்பு நிலையம் பொதுமக்களின் வசதிகருதி பருத்தித்துறை பஸ்நிலையத்தில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் இயங்கிவருகின்றது பொது மக்கள் தமது குறைபாடுகள், பாதிப்புகள்பற்றி இப்பொதுசனத் தொடர்பு நிலையத்துடன் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாமென விழிப்புக் குழுத்தலைவர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரில் நிலவும் குறைபாடுகள் பற்றியும் இக்குறைபாடுகளினால் பொது மக்கள் படும் அவஸ்தைகள் பற்றியும் விழிப்புக்குழுவினர் அண்மையில் பருத்தித்துறை நகரசபைச் செயலாளருடன் கலந்துரையாடி இக்குறைபாடுகளைப்போக்க ஆவன செய்யும் படியும் கோரிக்கை விடுத்தனர். இக்குறைபாடுகளைப் போக்கத் தன்னாலான முயற்சிகளை விரைவாக மேற்கொள்வதாக நகரசபைச்செயலாளர் திரு. எஸ். பத்மநாதன் விழிப்புக்குழுவினருக்கு உறுதியளித்தார்.

## 100க்கு மேற்பட்ட தமிழரும் 30 இராணுவ வீரரும் பலி!

### ஈ. பி. ஆர். எல். எவ். கூறுகிறது

(சென்னை)

கிளிநொச்சியில் நான்குநாட்களாக ஆயுதப்படையினருக்கும், தமிழ்ப் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலின்போது நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவித்தமிழரும், ஆயுதப்படையினர் 30 பேரும் மாண்டதாக ஈ. பி. ஆர். எல். எவ். அறிவித்துள்ளது

சென்னையில் இதுதொடர்பாக இவ்வியக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கிளிநொச்சியில் கொல்லப்பட்ட அனைவரும் போராளிகள் என்ற அரச அறிக்கையை நிராகரித்துள்ளது. (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# சுன்னுகத்திலும் மக்கள் பேரணி நடத்த முடிவு

[சுன்னுகம்]

சுன்னுகம் பிரஜைகள் குழுவினது முன்முயற்சியின்பேரில் மக்கள் எழுச்சிப்பேரணி வருகின்ற திங்களன்று நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு வலயத்தை அகற்றக் கோரியும், இராணுவ அத்துமீறல்களைக் கண்டித்தும், பொதுமக்கள் பாதுகாப்பினைப் பேணவுமென நடைபெறவுள்ள மேற்படி பேரணி சுன்னுகம் மயிலணி கந்தசுவாமி கோவில் முன்றலிலிருந்து ஆரம்பித்து மருதனுமடம் சந்தியைச் சென்றடைந்து ஒரு மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட

# புதிய ஆசிரிய நியமனக் கடிதம்

[யாழ்ப்பாணம்]

கடந்த திங்கட்கிழமை வழங்கப்படவிருந்த கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் கிளிநொச்சி சம்பவங்கள் காரணமாக அன்று வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களையும் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை கிளிநொச்சி கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் ஈழநாடுவுக்குத் தெரிவித்தார்,

### பாடப்புத்தகம் இன்று விநியோகம்

கிளிநொச்சி மாவட்டப்பாடசாலைகளுக்கான பாடபுத்தகங்கள் இன்று புதன்கிழமை கிளிநொச்சி கல்விப் பணிமனையில் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [பி]

# 'அந்த' அதிகாரிகள் சுகமாக இருக்கிறுர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. சிவகாமணியும், செயலகக் கணக்காளர் திரு. கு. லோகசவுந்தரலிங்கமும் கடத்தப்பட்டதாக வெளிவந்த செய்தி தவறுனது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக அரசாங்க அதிபர் முல்லைத்தீவு கடற்கரையில் உள்ள அரச விடுதியிலும் கணக்காளர் தமது சொந்த வீட்டில் குடும்பத்தினருடனும் இருப்பதாகவும், வேண்டுமென்றே இரு அதிகாரிகளும் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட செய்தி பரப்பப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. [மா]

# மரண அறிவித்தல்

### உயர்திரு. இராமநாதன் ஜெயபாலன்

உயர்திரு. இராமநாதன் ஜெயபாலன் [நிர்வாக அதிகாரி, நெல் சந்தைப்படுத்தும் சபை, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு] நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணையை வதிவிடமாகக் கொண்டவருமாகிய இ. ஜெயபாலன் காலமாகிவிட்டார்.

அன்னரின் இறுதிஆராதனை 06-02-86 வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் 478/3 கே. கே. எஸ் வீதி வண்ணுர்பண்ணை யாழ்ப்பாணஇல்லத்தில்நடைபெற்று யாழ் சென். ஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். [C584]

### திருமதி சுப்பிரமணியம் தங்கரத்தினம்

திருமதி சு. தங்கரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நொத்தாரிஸ் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சட்டத்தரணி சு. செ. மகாதேவா, டாக்டர் வாமதேவன் [சிறுவர் வைத்திய நிபுணர், யாழ். அரசினர் வைத்தியசாலை], இராஜதேவா [பொறியியலாளர், லண்டன்], விஜயதேவா [பொறியியலாளர், லண்டன்], டாக்டர் யோகதேவா [லண்டன்], இராஜாம்பாள், கமலாம்பாள், அமிர்தாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, டாக்டர் றஞ்சி [தனியார் மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்], ஜெயராணி, கீத்தா, லீலா, காலஞ்சென்ற முருகேசு, பூபாலராஜா, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று புதன் கிழமை [5-2-86] பி. ப. இரண்டு மணிக்கு 105/1, கண்டி வீதியிலிருக்கும் அன்னரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

[C 583]

## இஸ்ரேலுக்கு எதிரான சுவரொட்டிகள்

[யாழ்ப்பாணம்]

ஜெருசலம் அல் - அக்ஸா பள்ளி வாசலைத் தாக்கி விடுவதன் மூலம் பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை ஒழித்துக்கட்டிவிடமுடியாது என்றும் ''யு என் பி அரசே மதவெறிபிடித்த இஸ்ரேலியர்களை நாட்டைவிட்டு வெளியேற்று'' என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகளை இஸ்லாமிய மக்கள்முன்னணியனர் யாழ் நகரமெங்கும் ஒட்டியுள்ளனர். [ஐ]

## இங்கிலாந்து வெற்றி!

[கொழும்பு]

கொழும்பில் இலங்கை அணிக்கும் இங்கிலாந்து 'பி' அணிக்குமிடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருக்கிறது.

இங்கிலாந்து 9 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்கள், இலங்கை சகல விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்கள்.

## முல்லைத்தீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் சென்றதாகவும் அப்பொழுது கடலில் இருவள்ளங்களில் சென்றவர்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதாகவும், இறந்தவர்கள் தீவிரவாதிகள் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## திருமலையில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சில இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

இங்குள்ள அரசாங்க அலுவலகங்களில் பறக்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடிகள் யாவும் நண்பகலுடன் இறக்கப்பட்டிருந்தன. [ய-து]

## ஒட்டிசுட்டான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியிலும் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே நேரடி மோதல் இடம்பெற்றது. சேதமடைந்தவர்கள்விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இப்பகுதி இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள மக்களும், கடைச் சொந்தக்காரர்களும் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றுள்ளதால் நகர்ப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது. [மா]

## மன்னுர்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி

இறந்த நிலையில் மன்னுர் ஸ்ரேடியத்திலுள்ள மின்கம்பம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்தார்.

இவர் ஒரு சமூகவிரோதிஎன்றும், இராணுவத்தினருக்குத் தகவல் கொடுப்பவரென்றும் இதனுல் மரணதண்டனை விதிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்று சடலத்திற்கருகில் கிடக்கக் காணப்பட்டது.

இவரின் சடலத்தை நேற்று நண்பகல் பொலிசார் எடுத்துச் சென்றனர். [மா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389,

# மரண அறிவித்தல்

### திரு. D. R. குணசேகரம்

அராலி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. D. R. குணசேகரம் (சட்டத்தரணி, Retired Asst. Assessor of Income Tax) காலமானுர். இவர் லில்லி மகிழ்மலரின் அன்புக் கணவரும், ஜோய், க்றிஸ்ட்டா, ராஜன், பாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், A. C. கனகராஜா, Dr. A. அருமைநாயகம், சிலோஜினி, மனோ ஆகியோரின் மாமனுமாவார். நல்லடக்க ஆராதனை(இன்று) புதன்கிழமை 5-ம் திகதி பி.ப.3-00 மணிக்கு Dr. கனகராஜாவின் இல்லம், மக்லியட் வைத்தியசாலை இணுவிலில் நடைபெறும். நல்லடக்கம் வட்டுக்கோட்டையில் இடம்பெறும்.

[C 581]

### பொ. உமாபரன்

பொன்னம்பலம் உமாபரன் 4-2-86 அன்று அகால மரணமானுர். அன்னர் திரு. பொன்னம்பலம் [இளைப்பாறிய அதிபர்], திருமதி பொன்னம்பலம் தங்கரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியை] ஆகியோரின் அன்பு மகனும், திருமதி கிருஷ்ணதாசன் பத்மராணி, ஈஸ்வரன் [சுவிற்சர்லாந்து], தயாபரன், சயந்தி ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ணதாசனின் மைத்துனரும், தமியாவின் ஆசை மாமாவும் ஆவார். அன்னரின் பூதவுடல் 5-2-86 [இன்று] பிற்பகல் 3 மணியளவில் 215. நாவலர் றேட் யாழ்ப்பாணத்திலுள்ள அன்னரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
S. பொன்னம்பலம்,
இளைப்பாறிய அதிபர்.

[C 580]

### திருமதி மீனுட்சி நாகலிங்கம்

திருமதி மீனுட்சி காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், தவஞானத்தின் அன்புத் தாயாரும், கனகராசாவின் [பெரியகடை மாக்கற் வர்த்தகர்] மாமியாரும், கண்ணனின் அன்புப் பேத்தியும், பத்மநாதன். கிருபாகரன் [பிரான்ஸ்] அனுசயா ஆகியோரின் பெரியதாயாருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 5-02-86 [இன்று] புதன்கிழமை காலை 10-00 மணிக்கு ஆறுகால் மடம் புதிய றேட்டிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

[C 577] தகவல்: இ. கனகராசா.

### திருமதி பேபி சரோஜினி பாலகிருஷ்ணன்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காங்கேசன்துறை வாசியுமாகிய திருமதி பேபி சரோஜினி 3-2-86 திங்கட்கிழமை காலமானுர். இவர் திரு. க. பாலகிருஷ்ணன் (ஜெர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், முகுந்தன், கிருஷ்சாந்தி, மிருணுளினி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற திரு. சி. சண்முகம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) திருமதி ஆச்சிமுத்து சண்முகம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகளும், திருமதி திருமகள் அனேகர் [சாம்பியா], திரு. ச. நடராஜலிங்கம் [லண்டன்], திரு. ச. சிவலிங்கம் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார், அன்னரின் ஈமக்கிரியைகள் 5-2-86 (இன்று) புதன்கிழமை பி. ப. 3 மணியளவில் குமார கோவில் வீதி, காங்கேசன்துறையில் நடைபெறும்.

தகவல்: க. பரஞ்சோதி,
காங்கேசன்துறை.

[C 582]

### திருமதி பத்மாவதி சிவஞானரெத்தினம்

பத்மாவதி சிவஞானரெத்தினம் காலமானுர். இவர், ஓய்வுபெற்ற சௌக்கியசேவை அத்தியட்சகர் டாக்டர் க. சிவஞானரெத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசவாசல் முதலியார் வ. பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும், டாக்டர் பத்மினி காசிநாதன், டாக்டர் நளாயினி, யோகு பசுபதி, கிருஷ்ணரெத்தினம் [U. K] திருமதி முகுந்தினி சிவபாதம், டாக்டர் சிறீராமரெத்தினம் [U. S. A.] ஆகியோரின் அன்புத்தாயாரும், டாக்டர் காசிநாதன் [சிங்கப்பூர்] டாக்டர் யோகு பசுபதி [நியூசிலாந்து] கீதா [U. K] டாக்டர் சிவபாதம் [M. O. H.] மன்னுர், ரஞ்சி (U. S. A.] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை [6-2-86] காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் எருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: டாக்டர் க. சிவஞானரெத்தினம்,
உரும்பிராய்

[A 187]

### திரு. அல்பிரட் இராஜசிங்கம் யேசுதாஸன்

திரு. A. R. Jesudasan

இளைப்பாறிய ஆசிரியர் காலமானுர் இவர் கிறேஸ் செல்வமணியின் அன்புக்கணவரும், அற்புதராசா, தபேந்திரன், சாவித்திரி, சந்திரா [France], ராஜகுமார், செல்வக்குமார், ரேகினி, ரெக்கிற்ரா, ரஞ்சிற்ரா, அன்ரன் [Dubai] ஆயோரின் அன்புத்தந்தையும், Robert Jesudasan காலஞ்சென்ற Grace, James, Edwin, தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார் அன்னரின்மரணச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

மனைவி: கிறேஸ் செல்வமணி யேசுதாசன்,
சேர்ச் லேன்,
நுணுவில் மேற்கு.
சாவகச்சேரி.

[C 572

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org